விடுதிகள் என்று கணக்கெடுத்தால், இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான 56 விடுதிகள் இருக்கின்றன. அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை நீக்குவதற்கு, இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் நிதியொதுக்கீடு செய்யப்பட்டு, அந்த விடுதிகளில் பழுதுபார்க்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. கடந்த ஆண்டுகூட ரூ.10 கோடி மதிப்பீட்டில் திருத்தணி போன்ற திருக்கோயில்களில் உள்ள பக்தர்கள் தங்கும் விடுதிகளில் புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. வருகின்ற காலங்களில் இந்த விடுதிகளை இந்து சமய அறநிலையத் துறையே தன்னுடைய பராமரிப்பில் வைத்துக்கொள்வதா அல்லது சுற்றுலா வளர்ச்சித் துறையிடம் ஒப்படைப்பதா அல்லது தனியாரிடம் இந்த விடுதிகளை ஒப்படைத்து சிறந்த முறையில் நிருவகிப்பதா என்ற கருத்துரு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, அவர் எடுக்கின்ற முடிவின்படி தரமான வகையில் பக்தர்கள் தங்குகின்ற அளவிற்கு அனைத்து அடிப்படை வசதிகளுடன்கூடிய விடுதிகளாக உருவாக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் திரு. காந்திராஜன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைர் தலைவர்: *வினா வரிசை எண் 118, மாண்புமிகு உறுப்பினர் திரு. P.R.G. அருண்குமார், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

118—

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கக் கட்டடம்

***14478—திரு. P.R.G. அருண்குமார்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கவுண்டம்பாளையம் தொகுதி, வெள்ளமடை ஊராட்சியில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால் வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

2022 ஏப்ரல் 18]

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், கவுண்டம்பாளையம் தொகுதி, சர்க்கார் சாமகுளம் ஒன்றியம், வெள்ளமடை ஊராட்சியிலுள்ள ED 1217 வெள்ளமடை பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான அடிமனையோ, போதுமான நிதி வசதியோ இல்லாத காரணத்தால், புதிய கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. P.R.G. அருண்குமார் அவர்கள்.

திரு. P.R.G. அருண்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு மானியத்துடன் மாட்டுத் தீவனம் வழங்கப்பட்டு வந்தது. இது கடந்த ஆறு மாதங்களாக வழங்கப்படவில்லை. தொடர்ந்து வழங்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சா.மு. நாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரியான முறையில் ஒவ்வோர் ஒன்றியத்திற்கும் நாங்கள் மாட்டுத் தீவனத்தை அனுப்பிக்கொண்டிருக்கிறோம். எந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கப்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுத் தெரிவித்தால், அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. P.R.G. அருண்குமார் அவர்கள்.

திரு. P.R.G. அருண்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவுண்டம்பாளையம் தொகுதிக்குட்பட்ட பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியம், குப்பச்சிபாளையம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு மானியத்துடன்கூடிய மாட்டுத் தீவனம் 6 மாதங்களாக வழங்கப்படவில்லை என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என் தொகுதிக்குட்பட்ட ஆணைக்கட்டி மலைப் பகுதியிலே ஆவினுக்குச் சொந்தமான 22 ஏக்கர் நிலமுள்ளது. அந்த நிலத்தை மலைவாழ் மக்களுக்குப் பயன்படுகின்ற வகையிலே, சுய உதவிக் குழுவிடம் ஒப்படைத்து, அதன்மூலமாக ஆதிவாசிப் பெண்களுக்கு கால்நடைகள்–பசுக்களை வழங்கி, மேய்ச்சல் நிலத்திலே தீவனப் பயிர்களை உற்பத்தி செய்து, அவர்களுடைய வாழ்வாதாரத்திற்கு ஒரு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சா.மு. நாசர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தச் சங்கம் பதிவு செய்யப்படவில்லை என்பதையும், சம்பந்தப்பட்ட சங்கம் பதிவு செய்யப்படும்பட்சத்தில், நிச்சயமாக நீங்கள் கேட்டுக்கொண்டபடி, உரிய ஏற்பாடுகள் செய்து தரப்படும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைர் தலைவர்: *வினா வரிசை எண் 119, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பரந்தாமன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

119—

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

நூலகம்

***10155—திரு. இ. பரந்தாமன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எழும்பூர் தொகுதி, மோதிலால் தெரு பகுதியில் நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்கி, தங்கள் அனுமதியுடன் விடையளிக்கிறேன்.*